# பதிவுசெய்து, வாக்களிக்கத் தயாராகுங்கள்



ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

ROE47 A4 Tamil 07/2024

## வாக்களிக்க, ஏன் பதிவு செய்ய வேண்டும்?

நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்டிருந்தால், பொதுத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் பங்குபெறலாம். தேர்தல்கள் நீங்கள் அக்கறை கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிப் பாராளுமன்றத்தில் அல்லது உங்களது உள்ளூராட்சிச் சபையில் உங்கள் பிரதிநிதியாக யார் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய உங்களது கருத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களாகும்.

**நீங்கள் வாக்களிக்க பதிவு செய்வதன் மூலம் உங்கள் குரல் கேட்கப்படுவதை நீங்கள் உறுதி செய்யலாம்.**

## வாக்களிக்க யாரெல்லாம் பதிவுசெய்யலாம்?

நீங்கள் பின்வரும் தகுதியுடன் இருந்தால், கண்டிப்பாகப் பதிவுசெய்ய வேண்டும்:

- **உங்களுக்கு வயது 18 அல்லது அதற்குமேல் இருந்தால், மேலும்**
- **நீங்கள் ஒரு நியூசிலாந்து குடிமகன்/குடிமகள் அல்லது ஒரு நியூசிலாந்து நிரந்திர குடியிருப்பாளர், மற்றும்**
- **நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏதாவது நேரத்தில் ஒரு வருடத்துக்கு மேல் நியூசிலாந்தில் தொடர்ச்சியாக வசித்திருக்கிறீர்கள்.**

நீங்கள் அவுத்திரேலியராக, குக்குத் தீவினராக, நியூவே நாட்டவராக அல்லது தோக்கலாவு பகுதியைச் சேர்ந்தவராக இருந்து, நியூசிலாந்தில் தொடர்ச்சியாக 12 மாதங்கள் வசித்திருந்தால் நீங்கள் பதிவு செய்யலாம்.

நீங்கள் இவ்வாறாக இருந்தால், நீங்கள் வெளிநாட்டில் வசிப்பவராயின் நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்யலாம்:

- **நீங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் நியூசிலாந்தில் வசித்திருக்கும் ஒரு நியூசிலாந்துப் பிரசை, அல்லது**
- **நீங்கள் கடந்த 12 மாதங்களில் நியூசிலாந்தில் வசித்திருக்கும் நியூசிலாந்தின் ஒரு நிரந்தரக் குடியிருப்பாளர்.**

தேர்தல் பொறுத்தவரை, ஒரு நிரந்தர குடியிருப்பாளர் என்பவர், நியூசிலாந்தில் சட்டப்பூர்வமாக வாழும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியேற தேவை இல்லாத ஒருவராகும். குடியுரிமை விசாவில் உள்ள ஒருவரும் இதில் அடங்குவார்.

நீங்கள் 17 வயதை அடைந்தவுடன் பதிவு செய்யலாம். நீங்கள் 18 வயது அடைந்ததும், நீங்கள் தானாகவே பதிவு செய்யப்படுவீர்கள்.

## நீங்கள் மாவோரியாக இருந்தால், வாக்களிக்கப் பதிவு செய்தல்

நீங்கள் ஒரு மாவோரி வமிசத்தவராக இருந்து, முதன்முறையாகப் பதிவு செய்கிறீர்கள் என்றால், நீங்கள் பொது வாக்காளர் பட்டியல் அல்லது மாவோரி வாக்காளர் பட்டியல் ஆகியவற்றில் எந்த வாக்காளர் பட்டியலில் இருக்க விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவு செய்ய வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், நீங்கள் இருக்கும் வாக்காளர் இடாப்பை இவை தவிர எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம்:

- ஒரு பொதுத் தேர்தலுக்கு அல்லது உள்ளூர்த் தேர்தலுக்கு முன்னுள்ள 3 மாதங்களில்
- பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கு முன்னர் மாற்றம் இடைத்தேர்தல் நடைபெறும் வாக்காளர் குழுவுக்குள் உங்களை இணைக்குமாக இருந்தால்.

**உங்களது இடாப்புத் தெரிவு உங்களுக்கு என்ன செய்யும்?**

உங்களது தெரிவு நீங்கள் எத்தேர்தல் தொகுதியில் வாக்களிக்கலாம் என்பதையும், நீங்கள் பொதுத் தேர்தலிலும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் யாருக்கு வாக்களிக்கலாம் என்பதையும் பாதிக்கும்.

நீங்கள் பொது வாக்காளர் இடாப்பைத் தெரிவு செய்தால், நீங்கள் ஒரு பொதுத் தேர்தலில் ஒரு பொதுத் தேர்தல் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் மாவோரி வாக்காளர் இடாப்பைத் தெரிவு செய்தால், நீங்கள் ஒரு மாவோரி தேர்தல் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள்.

நீங்கள் எந்த வாக்காளர் இடாப்பில் இருந்தாலும், நீங்கள் ஒரு பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகளின் ஒரே பட்டியலுக்கு வாக்களிக்கலாம்.

நீங்கள் தெரிவு செய்யும் இடாப்பு நீங்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் யாருக்கு வாக்களிக்கலாம் என்பதைப் பாதிக்கலாம். நீங்கள் மாவோரி இடாப்பைத் தெரிவு செய்து, உங்கள் உள்ளூராட்சிச் சபை ஒரு மாவோரிக் குறிச்சியை அல்லது தொகுதியைக் கொண்டிருந்தால், நீங்கள் மாவோரிக் குறிச்சியில் அல்லது தொகுதியில் உள்ள பிரதிநிதிகளுக்கு வாக்களிப்பீர்கள். நீங்கள் பொது இடாப்பைத் தெரிவு செய்தால், நீங்கள் பொதுக் குறிச்சியில் அல்லது தொகுதியில் உள்ள பிரதிநிதிகளுக்கு வாக்களிப்பீர்கள்.

## உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு பற்றிக் கவலையா?

நீங்கள் உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பை அல்லது உங்களது குடும்பத்தின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் இரகசியம் பேணும் வெளியிடப்படாத இடாப்பிற் சேர்க்கப்பட விண்ணப்பிக்கலாம். நாம் உங்கள் பதிவு விபரங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதுடன் அவற்றை யாருக்கும் கொடுக்க மாட்டோம்.

கூடுதல் தகவலுக்கும், விண்ணப்பப் படிவத்துக்கும் **vote.nz** வலைத்தளத்திற்குச் செல்லவும் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும்.

## நான் எவ்வாறு பதிவு செய்வது?

பதிவு செய்வது அல்லது உங்கள் விவரங்களைப் புதுப்பிப்பது எளிதாகும். நீங்கள்:

- இணையம் மூலம் பதிவு செய்ய **vote.nz** வலைத்தளத்திற்கு சென்று, உங்கள் நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்து பாஸ்போர்ட் அல்லது RealMe சரிபார்க்கப்பட்ட அடையாளத்தைப் பயன்படுத்தலாம்
- **0800 36 76 56** என்ற கட்டணமில்லா எண்ணுக்கு அழைத்து, உங்களுக்கு ஒரு படிவத்தை அனுப்பச் சொல்லிக் கேட்கலாம்

நீங்கள் பதிவு செய்ததும், உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேரும். வாக்களிப்பதற்கு நீங்கள் கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறை நீங்கள் வீடு மாறும் போதும் உங்கள் விவரங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

## பதிவு செய்ய உதவி தேவையா?

உங்கள் பதிவுப் படிவத்தை நிரப்ப நீங்கள் ஒரு நண்பர் அல்லது வீட்டிலுள்ளவர் போன்று உங்களுக்குத் தெரிந்த ஒருவரை உதவக் கோரலாம், அல்லது அவர்களையே படிவத்தை நிரப்பித் தரச் சொல்லலாம்.

நீங்கள் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

உடல் அல்லது மனநலக் கோளாறு காரணமாக, தங்கள் பதிவுப் படிவத்தைப் பூர்த்தி செய்து, கையொப்பமிட இயலாத யாரையும் உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் அவர்களுக்கு உதவலாம்.

## மேலும் தகவல் தேவையா?

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்து கூடுதல் தகவல்களுக்கு:

- **vote.nz** வலைத்தளத்திற்குச் சென்று பார்க்கவும்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழையுங்கள்

பதிவு செய்வதையும் வாக்களிப்பதையும் பற்றிய தகவல்கள் பல மொழிகளிலும், மாற்று வடிவங்களிலும் **vote.nz** என்ற வலைத்தளத்தில் கிடைக்கப் பெறுகின்றன

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI